முருகப்பெருமான் துணை

**மகான் சூலமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.11.2022**, வெள்ளிக்கிழமை

1. தருமனே ஞானத்தலைவனே
   தவசியாக வந்த அரங்கனே
   வறுமை போக்கி வையகத்தை
   வளமாக்க வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிதனை சுபகிருது தேள் திங்கள்
   அய்யமற உபயதிகதி புகர் வாரம்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 02 ம் நாள் 18.11.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் சூலமுனிவர் யானும்
   வழங்குவேன் உலகோர் நலம் பெற
   சோரமின்றி ஞானப்படைகள்
   சுத்தநெறிபட உருவாக்கி வரும்
4. வருகின்ற ஞான வள்ளலே
   வாழும் ஞானியே உமை கண்டு
   திருவடி பற்றி மக்கள் பணிய
   தேசிகா என வணங்கி தீட்சை
5. தீட்சை அடைந்து ஆற்றல்பட
   தொடர்ந்து வர அரங்கன் வழி
   திட்டங்கள் யாவும் வெற்றியாகி
   தேட்டு தன வளமுடன் சகலவகை
6. வகையான பாதுகாப்புப் பெருகி
   வந்தடையும் வளர்ச்சி மாற்றம்
   மிகையான ஞான பலமுடன்
   மெய் ஞான சூட்சும சக்தி
7. சக்திகளும் அரங்கன் தயவால்
   சகலரும் அடைந்து நன்கு
   சக்திமிகு ஞானயுகம் தனை
   சற்குரு அரங்கன் நோக்கம் வகை
8. வகைதனில் செயலை கண்டு
   வல்லமையான தருமம் தன்னை
   மிகைபட வளர்த்து உலகில்
   மேலான தரும ஞான பலம்
9. பலம் கூட்டி கலியுகத்தை
   பாதுகாப்புமிக்க சத்திய யுகமாக்கி
   வலம் வருவர் ஞானிகள் துணைபட
   வருமுலகில் இந்த நிலை பெருக

10. பெருகவே வானவர் தேவர்
பெருமானாரின் மகா சக்திகளும்
ஆறுதலாக சூட்சும வடிவில்
அனைத்தும் துணையாக வந்து

11. வந்துமே உலக மாற்றமதும்
வடிவேலனார் தருகின்றபடி
விந்தைமிகு ஞான யுகமாக
வேலவனின் ஞான ஆட்சிக்காலமாக மாறும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—